**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் - பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் - கல்வி - விடுதிகள் - கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர், விடுதி காப்பாளர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் வருகையை உறுதி செய்யும் பொருட்டு முதற்கட்டமாக 20 கல்லூரி மாணவியர் விடுதிகளில் முக அங்கீகார அடிப்படையிலான பயோ-மெட்ரிக் கருவி பொருத்துவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை**

**அரசாணை (நிலை) எண்.58** **நாள் 10.11.2021**

**பிலவ, ஐப்பசி 24**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டது:**

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.சி3/5645/2021 நாள் 16.09.2021

**ஆணை:**

2021 - 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர், விடுதி காப்பாளர்கள் மற்றும் விடுதி பணியாளர்கள் ஆகியோரின் வருகையை உறுதி செய்யும் பொருட்டு முதற்கட்டமாக 20 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகளில் முக அங்கீகார அடிப்படையில் பயோ-மெட்ரிக் கருவிகள் ரூ.23,60,000/- செலவில் பொருத்தப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடிதத்தில் இத்துறையின் கீழ் செயல்படும் 1354 விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் உணவு மற்றும் பல்வேறு திட்டங்களுக்கு செலவிடப்படும் தொகை சரியான முறையில்

பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு, விடுதிகளில் தங்கும் மாணவ/மாணவியரின் எண்ணிக்கையை அவ்வப்போது உறுதி செய்திடுவது மிகவும் இன்றியமையாததாக உள்ளது என தெரிவித்துள்ளார்.

3. முக அங்கீகார அடிப்படையில் பயோ-மெட்ரிக் கருவி மூலம் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியரின் வருகையை உறுதி செய்வதால், உணவுக் கட்டணம் மற்றும் இதர செலவினங்களில் சரியான தொகை வழங்குவதை, ஆய்வு செய்யும் அலுவலரால் எளிதில் கண்டறிய முடிவதுடன், பள்ளி நேரத்தை தவிர மற்ற நேரங்களில் மாணவியர் விடுதியில் உள்ளதை உறுதி செய்ய முடியும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. எனவே பரீட்சார்த்த முறையில் 20 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர் விடுதிகளுக்கு முக அங்கீகார அடிப்படையில் பயோ-மெட்ரிக் கருவி பொருத்தி, ஒரே மென்பொருள் (Application Software Creation) கொண்டு மாணவியரின் வருகை பதிவுகளை துறை அமைச்சர், உயர் அலுவலர்கள் மற்றும் மாவட்ட அலுவலர்கள் கண்காணிக்கும் வகையில் செயல்படுத்திடலாம் எனவும், உருவாக்கம் செய்யப்படும் மென்பொருள் பின்னர் இத்திட்டம் ஏனைய விடுதிகளுக்கு விரிவாக்கம் செய்யப்படினும் பயன் தரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. மேலும், தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ஐ பின்பற்றி தகுதியான நிறுவனத்தை தெரிவு செய்து இணையதள வசதியுள்ள 20 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு, மாணவியரின் வருகையை உறுதி செய்ய முக அங்கீகார அடிப்படையில் பயோ-மெட்ரிக் கருவிகளை கொள்முதல் செய்யவும், அதனை பொருத்தி மாவட்ட மற்றும் மாநில அளவில் கண்காணிப்பதற்கான மென்பொருள் உருவாக்குவதற்கும் ஏற்படும் செலவின தொகை ரூ.23,60,000/-க்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடுமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து முதற்கட்டமாக, இத்துறையின் மூலம் செயல்படும், இணையதள வசதியுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 20 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல

கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர், விடுதி காப்பாளர் மற்றும் பணியாளர்கள் ஆகியோரின் வருகையை உறுதி செய்வதற்கு முக அங்கீகார அடிப்படையில் பயோ-மெட்ரிக் கருவியை பொருத்த அனுமதியும், இதற்குரிய மென்பொருள் மற்றும் வன்பொருளை உள்ளடக்கிய கருவியினை ரூ.23,60,000/- (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) உத்தேச மதிப்பீட்டில் நிறுவுவதற்கு நிருவாக அனுமதியும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

7. மேலும் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ல் உள்ள வழிமுறைகளை பின்பற்றி விலை நிர்ணயம் செய்யப்பட்ட பின் இத்திட்டத்திற்கு தேவையான நிதி ஒப்பளிப்பிற்கான கருத்துருவினை அரசுக்கு அனுப்பிட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.48550/நிதி(பி,மிபி,(ம)சி.ப)த்துறை, நாள் 09.11.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை- 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை- 5.
சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை – 5.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு) மதுரை.
மாநில கணக்காயர்,
சென்னை-18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 1), சென்னை-18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 2), சென்னை-18 (பெயரில்).
சம்பளக்கணக்கு அலுவலர், (கிழக்கு) சென்னை-5.
சம்பளக்கணக்கு அலுவலர், (தெற்கு) சென்னை-35.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

நகல் :

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.

மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச்செயலர், சென்னை-9.

நிதி (பி.மி.பி மற்றும் சிந)/ வ.செ.பொது 1)த் துறை, சென்னை – 9.

பி, மிபி (ம) சிந (பிந3)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.

இருப்புக் கோப்பு / உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

அரசாணை நிலை எண்.58, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2)த்துறை, நாள் 10.11.2021-ன் இணைப்பு.

முக அங்கீகார அடிப்படையில் பயோ-மெட்ரிக் கருவிகள் பொருத்தப்பட வேண்டிய 20 விடுதிகளின் பட்டியல் .

| தொடர் வரிசை | வ. எண். | விடுதியின் பெயர் |
|---|---|---|
| | | **1) சென்னை மாவட்டம்** |
| | | பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் |
| 1. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி- I, லேடி வெலிங்டன் வளாகம், திருவல்லிக்கேணி |
| 2. | 2 | கல்லூரி மாணவியர் விடுதி- II, லேடி வெலிங்டன் வளாகம், திருவல்லிக்கேணி |
| | | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் |
| 3. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி-I, லேடி வெலிங்டன் வளாகம், திருவல்லிக்கேணி |
| 4. | 2 | கல்லூரி மாணவியர் விடுதி- II, லேடி வெலிங்டன் வளாகம், திருவல்லிக்கேணி (இருப்பு) மன்னடி |
| | | **2) காஞ்சிபுரம் மாவட்டம்** |
| | | பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி |
| 5 | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, காஞ்சிபுரம் |
| | | **3) செங்கல்பட்டு மாவட்டம்** |
| | | பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் |
| 6 | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, தாம்பரம் |
| 7 | 2 | கல்லூரி மாணவியர் விடுதி, செங்கல்பட்டு |
| | | **4) வேலூர் மாவட்டம்** |
| | | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி |
| 8 | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, வேலூர் |
| | | **5) திருவண்ணாமலை மாவட்டம்** |
| | | பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி |
| 9. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, செய்யாறு |
| | | மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி |
| 10 | 2 | கல்லூரி மாணவியர் விடுதி, செய்யாறு |
| | | **6) தர்மபுரி மாவட்டம்** |
| | | பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி |
| 11. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, தர்மபுரி |

| | | |
|---|---|---|
| 7) கிருஷ்ணகிரி மாவட்டம் | | |
| | | பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி |
| 12. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, ஓசூர் |
| 8) நாமக்கல் மாவட்டம் | | |
| | | பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி |
| 13. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் |
| 9) ஈரோடு மாவட்டம் | | |
| பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி | | |
| 14. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, கோபிச்செட்டிப்பாளையம் |
| 10) திருச்சிராப்பள்ளி மாவட்டம் | | |
| சீர்மரபினர் நல விடுதி | | |
| 15. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, கிராப்போர்டு, திருச்சிராப்பள்ளி |
| 11) புதுக்கோட்டை மாவட்டம் | | |
| சீர்மரபினர் நல விடுதிகள் | | |
| 16. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி-I, புதுக்கோட்டை |
| 17. | 2 | கல்லூரி மாணவியர் விடுதி- II, புதுக்கோட்டை |
| 12) தஞ்சாவூர் மாவட்டம் | | |
| சீர்மரபினர் நல விடுதி | | |
| 18. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர் |
| 13) இராமநாதபுரம் மாவட்டம் | | |
| சீர்மரபினர் நல விடுதி | | |
| 19. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, இராமநாதபுரம் |
| 14) கரூர் மாவட்டம் | | |
| மிகப்பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி | | |
| 20. | 1 | கல்லூரி மாணவியர் விடுதி, கரூர் |

**ஆ.கார்த்திக்,**
**அரசு முதன்மைச் செயலாளர்**

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்